## இன்று

- விளம்பி ஆண்டு
- மாசி – 1
- பிப்ரவரி – 13
- புதன்கிழமை

**திதி:** வளர்பிறை அஷ்டமி காலை 10.35 பிறகு வளர்பிறை நவமி

**நட்சத்திரம்:** கார்த்திகை மாலை 5.38 பிறகு ரோகினி

**அ.யோகம்:** அமிர்த – சித்தயோகம்

**வாரசூலை:** வடக்கு

**குளிகை:** காலை 10.30 – 12.00

**ராகுகாலம்:** பகல் 12.00 – 1.30

**எமகண்டம்:** காலை 7.30 – 9.00

**சந்திராஷ்டமம்:** விசாகம், அனுஷம்

**நல்ல நேரம்**
காலை 9.30 – 10.30
மாலை 4.30 – 5.30

**சூரிய அஸ்தமனம்**
இன்று மாலை 5.39

**சூரிய உதயம்**
நாளை 6.38

## ராசிபலன்

**மேஷம்:** வாக்குவாதம் தவிர்க்கவும்
**ரிஷபம்:** நம்பிக்கை அதிகரிக்கும்
**மிதுனம்:** அதிக பணிச்சுமை
**கடகம்:** அவசரம் தவிர்க்கவும்
**சிம்மம்:** திடீர் போட்டியில் வெற்றி
**கன்னி:** வராத தொகை வரும்
**துலாம்:** பழைய கடன்கள் தீரும்
**விருச்சிகம்:** வெற்றிகரமான நாள்
**தனுசு:** எதிர்பாராத பணவரவு
**மகரம்:** பொறுமைக்கு பரிசு
**கும்பம்:** இடையூறு விலகும்
**மீனம்:** பொருள் சேர்க்கை

# இது உங்கள் இடம்

## கூட்டணியிலும் உள்ஒதுக்கீடு!

**நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் இருந்து அ. அப்பர்சுந்தரம் எழுதுகிறார்:**

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்களாகிய பொது மக்களும்,வேட்பாளர்களை கொடுக்கும்பெரிய கட்சிகளும், சிறிய லெட்டர்பேடு கட்சிகளும்புதுப்புது பாடங்களைகற்றுக்கொண்டே வருகின்றன. அந்த வகையில் வாக்காளர்களாகிய நாம்இலவசங்களை வாக்குறுதியாக பெற்றுள்ளோம். அறிவித்த பொருட்களை ஆட்சியின் 5 ஆண்டுகளில் பெற்றுள்ளோம்.

அதேபோல், திமுக, அதிமுக போன்றபெரிய கட்சிகளைதேர்தல் நேரத்தில் சிறிய கட்சிகளும், லெட்டர்பேடு இயக்கங்களும் போட்டி போட்டுக்கொண்டு வசீகரித்து ஆதரவு கடிதங்கள் கொடுத்து தங்களுக்குத் தேவையான தொகுதியை அபகரித்துக் கொள்ளும் நிலையும் தொடர்கிறது. அந்த கூட்டணி வெற்றிகரமாக 5 ஆண்டுகள் தொடர்ந்ததா என்று கேட்டால், கடந்தகால வரலாற்றில் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். ஒருவரையொருவர்வசைபாடி வந்த இயக்கங்கள் கூட, அதை முற்றிலும் மறந்துஎந்த கட்சி அதிக சீட்கொடுக்கிறதோ அந்த கூட்டணியில் சேர்ந்துகொண்டு தேர்தல் களத்தில் வலம் வருவதும் வழக்கம்.

ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் 20 ரூபாய் நோட்டுபார்முலா, புதிதாக அறிமுகம் ஆனது. இந்த தேர்தலிலும் புதிய திட்டம் அறிமுகமாக உள்ளது. அதாவது, பெரிய கட்சியுடன் கூட்டணியில் சேரும் நடுத்தர கட்சியானது, தனக்கு கிடைக்கும் தொகுதிக்குள்தன் தோழமை கட்சிக்கு உள் ஒதுக்கீடு செய்து கொடுக்க உள்ளதாக செய்திகள் வருகிறது.

பொதுவாக, கடைகளை வாடகைக்கு எடுக்கும் சிலர், அதே கடையை அதிக லாபத்துடன்உள் வாடகைக்கு கொடுப்பார்கள். அதற்கு ‘ பகடி’ என்று வியாபாரிகள் கூறுவார்கள். அதுபோல, லோக் சபா தேர்தலில்உள் ஒதுக்கீடு பகடி அரங்கேறப் போகிறது. இது, முற்றிலும்லாப நோக்கமே தவிர வேறொன்றுமில்லை. வாழ்க ஜனநாயகம்.

## குழப்பத்தில் எதிர்க்கட்சிகள்!

**கோவையில் இருந்து கே.சுரேஷ் எழுதுகிறார்:**

மாயாவதி, மம்தா போன்ற பெண் அரசியல்வாதிகள், மாநில அளவில் மட்டுமே பேசக்கூடியவர்கள். தேசிய தலைவர்களாக அவர்களை யாரும் அங்கீகரிக்கவில்லை. அவர்களின் கணக்குப்படி 3வது அணி அமைத்து வெற்றி பெற்றாலும், கூட்டணி ஆட்சி எத்தனை நாள் நீடிக்கும் என்பதும் பெரிய கேள்விக்குறி. மத்தியில் நிலையான அரசு இருந்தால் மட்டுமே வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும். மோடி தலைமையில் 2014ல் பாஜ ஆட்சி அமைந்தது. நான்கரை ஆண்டுகளில் பல பொருளாதார சீர்திருத்தங்களை மோடி செய்துள்ளார்.

ராகுலை எதிர்க்கட்சிகள் பிரதமராக ஏற்றுக்கொள்ள தயங்குகின்றன. சென்னையில் நடந்த விழாவில், ராகுலை பிரதமர் வேட்பாளராக ஏற்கிறோம் என்று திமுக தலைவர் ஸ்டாலின் அறிவித்தார். அதேநேரம், மேற்குவங்கத்தில் நடந்த எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் பேசும்போது, ராகுல் பற்றி ஸ்டாலின் வாய் திறக்கவில்லை. எதிர்க்கட்சிகளிடையே பொதுவான தலைவர், பிரதமர் வேட்பாளர் யார் போன்ற முடிவுகள் இதுவரை கிடையாது.

இப்போதைய நிலையில் பாஜ மட்டுமே மோடியை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி, ஓட்டு கேட்க உள்ளது. காங்கிரசும் தன் பங்குக்கு ராகுலை பிரதமர் வேட்பளராக அறிவித்து ஓட்டு கேட்கலாம்.

email: dinamalarcns@gmail.com

**எழுதுங்க:** இது உங்கள் இடம், தினமலர், டிவிஆர் நியூஸ் ஆபீஸ், 38/57, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 8.

## ‘கூகுள் பிளஸ்’ ஏன் மூடப்படுகிறது?

வரும் ஏப்ரல் 2ம் தேதி முதல், ‘கூகுள் பிளஸ்’ அக்கவுண்ட் மூடப்படுகிறது. இதனால், புதிதாக ‘கூகுள் பிளஸ்’ அக்கவுண்ட் புரொபைல், கூகுள் பிளஸ் பக்கங்கள், கூகுள் பிளஸ் நிகழ்வுகளை (கூகுள் இவன்ட்ஸ்) போன்றவற்றை இனி யாரும் உருவாக்க முடியாது.

வரும் ஏப்ரல் 2ம் தேதிக்கு முன்னதாக பயனாளர்கள் தங்கள் கூகுள் பிளஸ் அக்கவுண்ட்டில் உள்ள தகவல்களை டவுன்லோட் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, கூகுள் வெப்சைட் சப்போர்ட் டிவிஷனில் வெளியாகியுள்ள தகவல்களை இனி பார்ப்போம்.‘பயனாளர் வெர்ஷன்’ கூகுள் பிளஸ் மற்றும் அதுசார்ந்த ஏபிஐ (அப்ளிகேஷன் புரோகிராம் இன்டர்பேஸ்) போன்றவை ஏப். 2ல் முழுமையாக மூடப்படும்.

கூகுளின் புதிய சாப்ட்வேர் அப்டேட்டின்போது சிறிய தொழில்நுட்பப் பிரச்னையால், 52.5 மில்லியன் பயனாளர்கள் பாதிப்புக்குள்ளாகினர். பயனாளர்களின் தகவல்கள் பாதுகாப்பில் பாதிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து தீவிரமான தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பு கருதி கூகுள் பிளஸ் அப்ளிகேஷன் நிறுத்தப்பட உள்ளது. கூகுள் பிளஸ் மூடப்படுவதற்கு இதுவே முதன்மைக் காரணம்.

மற்ற சமூக வலைதள பயனாளர்களுடன் ஒப்பிடும்போது, கூகுள் பிளஸ் அப்ளிகேஷன் பயன்படுத்தும் பயனாளர் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதும் கூகுள் பிளஸ் மூடப்படுவதற்கு மற்றொரு காரணம்.

இனி, கூகுள் பிளஸ் வர்த்தகத்துக்கும் வியாபாரத்துக்கும் பயன்படும் வகையில் நிறுவன வாடிக்கையாளர்களுக்காக மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு‘நிறுவன வெர்ஷனாக’ (என்டர்பிரைஸ் வெர்ஷன்) வெளியிடப்பட உள்ளது.

கூகுள் பிளஸ் அக்கவுண்ட்டில் ஆல்பத்தில் பதிவு செய்து வைத்துள்ள புகைப்படங்கள், வீடியோக்கள் உட்பட கூகுள் பிளஸ் பக்கங்கள் நீக்கப்பட்டுவிடும். இவற்றை வரும் ஏப்ரல் 2ம் தேதிக்குள் டவுண்லோட் செய்து சேமித்துக் கொள்ளலாம். கூகுள் போட்டோவில் பதிவு செய்து வைத்துள்ள புகைப்படங்களும் வீடியோக்கள் நீக்கப்பட மாட்டாது.

பயனாளர்களின் கூகுள் பிளஸ் அக்கவுண்ட் மூடப்பட்டால், கூகுளின் மற்ற சர்வீஸ்களான, ஜிமெயில், கூகுள் போட்டோஸ் மற்றும் கூகுள் டிரைவ் போன்ற சேவையில் பாதிப்பு இருக்காது.

– காம்கேர் கே.புவனேஸ்வரி

தினமலர்

13 பிப்ரவரி 2019, புதன்

## அள்ளிவீச அதிகாரம் ஏது?

சட்டசபையில் தாக்கல் செய்த பட்ஜெட்டில் மாநிலத்தின் கடன் தொகை 4 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளதாக அறிவித்த அடுத்த சில நாட்களில், வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு நிதியுதவியாக வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

தமிழகத்தின் இன்றைய மக்கள் தொகை ஏழரைக் கோடி. சராசரியாக குடும்பத்துக்கு 4 பேர் என்று கணக்கிட்டு தமிழகத்தில் 2 கோடி குடும்பங்கள் இருப்பதாக எடுத்துக்கொண்டால், அதில் வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கும் 60 லட்சம் குடும்பங்கள் வருவதாக அரசு சொல்கிறது.

கிராமங்களில் 35 லட்சம் குடும்பங்கள், நகரங்களில் 25 லட்சம் என 60 லட்சம் குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்க ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, பொங்கல் பரிசு என்ற பெயரில் எல்லா குடும்பத்துக்கும் தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 2 ஆயிரத்து 250 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இப்போது சிறப்பு நிதி என்ற பெயரில் ஆயிரத்து 200 கோடி ரூபாய் என்றால் மாநிலத்தின் கடன் இன்னும் கூடும்.

இப்போதே நிதிநிலை சரியில்லாமல் தடுமாறும் தமிழகம் இந்த செலவை எப்படி சமாளிக்கும் என்ற கேள்வி ஒருபக்கம் இருக்க, இப்போது சிறப்பு நிதி கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

இதற்கு அரசுத் தரப்பில் சொல்லப்பட்டிருக்கும் விளக்கம், கஜா புயலாலும் வறட்சியாலும் மாநிலம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதுதான்.

ஆனால், தமிழகத்தில் கடந்த ஆண்டைவிட பயறு சாகுபடி அதிகரித்து பயறு உற்பத்தி கூடியுள்ளதால் பயறு விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசே சொல்லியிருக்கிறது. இதன்மூலம் தமிழகத்தில் வறட்சி இல்லை என்பதை ஒப்புக் கொண்ட அரசு, இப்போது வறட்சிக்காக சிறப்பு நிதி என்பது வேடிக்கையாக தெரிகிறது.

அரசின் அறிவிப்பின்படி 2 கோடி குடும்பங்களில் 60 லட்சம் குடும்பங்கள், அதாவது 35 சதவீத குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ்இருக்கின்றன என்றாகிறது. நாட்டில் தொழில் வளர்ச்சியில் 2வது இடத்தில் இருப்பதாக சொல்லப்படும் மாநிலத்தில் 35 சதவீத குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் என்றால், தொழில்வளர்ச்சியின் பயன் யாருக்கு போய் சேர்ந்திருக்கிறது என்ற பெரிய கேள்வி எழுகிறது. அரசியல்வாதிகள் மற்றும் பெரும் தொழிலதிபர்கள் மட்டுமே பிழைக்கிறார்கள் என்று மக்கள் புலம்பிக் கொண்டிருப்பது உண்மை என்று அரசே சொல்கிறதா?

ஆக, இதெல்லாம் ஓட்டுக்கு சட்டரீதியாக கொடுக்கப்படும் லஞ்சமாகவே தெரிகிறது. அப்படி, உழைத்து தந்தவர்களின் வரிப்பணத்தை அரசியல் நோக்கத்தோடு அள்ளிவீசுவது ஏற்புடையதல்ல.